

விழுப்புரம் மாவட்டம் திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி திருவெண்ணெய்நல்லூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 4வது பட்டமளிப்பு விழாவில் மாணவ – மாணவிகளுக்கு கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் முன்னாள் அமைச்சர் முனைவர். க.பொன்முடி எம்.எல்.ஏ. கலந்து கொண்டு பட்டங்களை வழங்கினார். உடன் திருவள்ளுவர் பல்கலைக்கழக தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் பாபு ஜீவனாந்தம், கல்லூரி முதல்வர் இந்திரா, ஒன்றியக் கழகச் செயலாளர் பி.வி.ஆர். சு.விசுவநாதன், நகரச் செயலாளர் பூக்கடை கணேசன், ஒன்றியக் குழுத் தலைவர் ஓம் சிவ சக்திவேல், பேரூராட்சி மன்றத் தலைவர் அஞ்சுகம் கணேசன், ஊராட்சி மன்றத் தலைவர் கௌரி கோவிந்தராஜ், ஒன்றிய கவுன்சிலர் ஏழுமலை மற்றும் பேராசிரியர்கள், துணை பேராசிரியர்கள், மாணவ – மாணவிகள் உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### தஞ்சை நாஞ்சிக்கோட்டை அருகே சாலை விபத்து!

# உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.3 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஆக.15-

**தஞ்சாவூர் மாவட்டம், நாஞ்சிக் கோட்டை சரகம், மாதாக்கோட்டை மேம் பாலம் அருகில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவிகளை முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித் துள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது :-

தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் வட்டம், நாஞ்சிக்கோட்டை சரகம், மாதாக் கோட்டை மேம்பாலம் அருகில் நேற்று (13.08.2025) மாலை 06.00 மணியள வில் தஞ்சாவூரிலிருந்து பனங்காடு சாயபுரம் கோவிலுக்கு இருசக்கர வாக னத்தில் சென்றுகொண்டிருந்தபோது பின்னால் கேரளாவிலிருந்து நாகூருக்கு சுற்றுலா சென்றுகொண்டிருந்த இனோவா கார் ஒன்று எதிர்பாராதவித மாக மோதிய விபத்தில் இருசக்கர வாக னத்தில் பயணம் செய்த அறிவழகன் (வயது 37), செல்வி.பவியாஸ்ரீ (வயது 9) மற்றும் செல்வி.தேஜாஸ்ரீ (வயது 4) ஆகிய மூன்று நபர்களும் சம்பவ இடத்தி லேயே உயிரிழந்தனர் என்ற துயரகர மான செய்தியைக் கேட்டு மிகவும் அதிர்ச் சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் பலத்த காயம டைந்து மேல்சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவம னையில் சிகிச்சை பெற்றுவரும் திருமதி. உஷா

(வயது 37) மற்றும் செல்வி.ரூபா (வயது 10) ஆகிய இருவருக்கும் சிறப்பு சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட் டுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவி னர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை யும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வ தோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத் தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபா யும், பலத்த காயமடைந்து மருத்துவம னையில் சிகிச்சை பெற்று வருபவர்க ளுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியி லிருந்து வழங்கிடவும் உத்தரவிட் டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### சென்னை – பெங்களூரு வழித்தடத்தில்

# தொழில்துறை முனைய உள்கட்டமைப்பின் நிலை என்ன?

## மக்களவையில் – டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!



*புதுடெல்லி, ஆக.15-*

*வேலூர் மற்றும் ராணிப் பேட்டை மாவட்டங்களில் சென்னை பெங்களூரு தொழில்துறை வழித்தடத் தின் (CBIC) கீழ் அனுமதிக்கப் பட்ட தொழில்துறை முனை யங்கள் சாலை மற்றும் தளவாட உள்கட்டமைப்புக ளின் நிலை குறித்து நாடாளு மன்ற மக்களவையில் வேலூர் தொகுதி உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த் கேள்வி எழுப் பினார்.*

*அவரது கேள்வி வருமாறு:-*

*வேலூர் மற்றும் ராணிப் பேட்டை மாவட்டங்களில் சென்னை பெங்களூரு தொழில்துறை வழித்தடத் தின் (CBIC) கீழ் அனுமதிக்கப் பட்ட தொழில்துறை முனை யங்கள் சாலை மற்றும் தளவாட உள்கட்டமைப்புக ளின் நிலை என்ன?*

*இதற்கு ஒன்றிய அரசு ஒப் புதல்களில் தாமதம் நிதி கட் டுப்பாடுகள் அல்லது கொள்கை தடைகள் காரண மாக உள்ளதா?*

*மேலும் மேற்கு தமிழ்நாட் டில் தொழில்துறை வளர்ச் சியை ஊக்குவிக்கவும் வேலைவாய்ப்பை உருவாக்க வும் ஏற்றுமதியை அதிகரிக்க வும் ஒன்றிய அரசு இந்த திட் டத்தை விரைவுபடுத்துமா?*

*இவ்வாறு அவர் கேள்வி கள் கேட்டிருந்தார்.*

*அதற்கு ஒன்றிய அரசின் வணிகம் மற்றும் தொழில் துறை ராஜாங்க அமைச்சர் ஜிதின் பிரசாதா எழுத்து பூர் வமாக அளித்த பதில் வருமாறு:*

*சென்னை பெங்களூரு தொழில்துறை தாழ்வாரம் (CBIC) என்பது NICDP இன் கீழ் பெங்களூர்சென்னை விரை வுச்சாலை அல்லது தேசிய விரைவுச்சாலை 7 (NE7) வழி யாக போக்குவரத்து முதுகெ லும்பாக மேற்கொள்ளப்ப டும் 11 தொழில்துறை தாழ்வாரங்களில் ஒன்றாகும்.*

*சிபிஐசியின் ஒரு பகுதி யாக தர்மபுரிசேலம் முனை (சென்னை பெங்களூரு தொழில்துறை வழித்தட விரி வாக்கத்தின் கீழ்) மற்றும் பொன்னேரி முனை ஆகிய இரண்டு திட்டங்கள் தொழில்துறை வழித்தடத் திட்டத்தின் ஒரு பகுதியாக தமிழ்நாடு மாநிலத்தில் வளர்ச்சிக்காக அடையாளம் காணப்பட்டுள்ளன.*

*தமிழ்நாட்டில் தொழில் துறை வளர்ச்சியை ஊக்குவிக் கவும் வேலைவாய்ப்பை உரு வாக்கவும் ஏற்றுமதியை அதிகரிக்கவும் மேலும் இம் மேம்பாட்டிற்காக மாற்று நிலங்கள் அடையாளம் காண முன்மொழியப்பட்ட இடங்களை தமிழ் நாடு மாநில அரசே மேம்பாட்டிற் காக எடுத்துக் கொள்வதாக முன்வந்துள்ளது.*

*இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறியுள்ளார்.*

### புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குவதை ஊக்குவிக்க ஒன்றிய அரசு

# ‘ஆத்ம நிர்பர் பாரத் ரோஞ்சர் யோஜனா’ திட்டத்தை செயல்படுத்தியுள்ளதா?

## மக்களவையில் – தே.மலையரசன் கேள்வி!



*புதுடெல்லி, ஆக.15-*

*மக்களவையில் கள்ளக்கு றிச்சி நாடாளுமன்ற உறுப்பி னர் தே.மலையரசன் கேள்வி எழுப்பியுள்ளார்.*

*அதில், கோவிட்19 மீட் புக்குப் பிந்தைய கட்டத்தில் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதை ஊக்குவிப் பதற்காக ஒன்றிய அரசு ஆத் மநிர்பர் பாரத் ரோஜ்கர் யோஜனா (ABRY) திட் டத்தை செயல்படுத்தியுள் ளதா?*

*அப்படியானால், அதன் விவரங்கள், இந்தத் திட்டத் தின் கீழ் உள்ளடக்கப்பட்ட மொத்த பயனாளிகள் மற் றும் நிறுவனங்களின் எண் ணிக்கை, அதன் தொடக்கத் திலிருந்து மாநில மற்றும் மாவட்ட வாரியாக தமிழ் நாடு உட்பட திட்டத்தின் கீழ் பயன்படுத்தப்பட்ட மொத்த நிதிச் செலவினங்க ளின் விவரங்கள் என்ன?*

*அரசாங்கம் இந்தத் திட் டத்தின் எந்தவொரு மதிப் பாய்வையும் அல்லது தாக்க மதிப்பீட்டையும் நடத்தியுள் ளதா, குறிப்பாக நாட்டில் இளைஞர்களிடையே வேலைவாய்ப்பு மற்றும் முறைசாரா துறை தொழிலா ளர்கள் நாட்டில் முறைசாரா வேலைவாய்ப்புக்கு மாறு வது குறித்து, ஜான்சி போன்ற சிறு மற்றும் நடுத் தர நிறுவனங்கள் அதிகமாக உள்ள மாவட்டங்கள் மற் றும் அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?*

*இந்தத் திட்டம் உள்ளூர் பொருளாதாரத்திற்கு பங்க ளித்த விதம் என்ன?*

*அதிக மக்கள் தொகை அடர்த்தி அல்லது அதிக இளைஞர் வேலையின்மை உள்ள தமிழ்நாடு போன்ற மாநிலங்களின் தேவைக ளுக்கு ஏற்றவாறு திட்டத்தை நீட்டிக்க அல்லது மாற்றிய மைக்க ஏதேனும் திட்டங்கள் உள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?*

*தகுதியுள்ள அனைத்து தொழில்துறை துறைகளிலும் இந்தத் திட்டத்தைப் பற்றிய பரந்த விழிப்புணர்வு மற்றும் திறம்பட செயல்படுத்து வதை உறுதி செய்வதற்காக ஒன்றிய அரசால் எடுக்கப் பட்ட நடவடிக்கைகள் என்ன? என தே.மலையரசன் எம்.பி. கேள்வி எழுப்பினார்.*

### கருநாடக மாநில தி.மு.க. சார்பில்

# மத்திய முன்னாள் அமைச்சர் முரசொலி மாறன் பிறந்த நாள் நிகழ்ச்சி!

## கருநாடக மாநிலக் கழக அமைப்பாளர் ந.இராமசாமி அறிக்கை!

*பெங்களூரு, ஆக. 15-*

*கருநாடக மாநில தி.மு.க சார்பில் மறைந்த மத்திய முன்னாள் அமைச்சரும், கலைஞரின் மனசாட்சியாக விளங்கி கழகத்தைக் காத்த முரசொலி மாறன் அவர்க ளின் 92-வது ஆண்டு பிறந்த நாள் நிகழ்ச்சி 18-08-2025, திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு கருநாடக மாநில தி.மு.க. கலைஞரக வளாகம், தளபதி மு.க. ஸ்டாலின் மணிவிழா அரங் கத்தில் உள்ள முரசொலி மாறன் அவர்களின் திருவுரு வப்படத்திற்கு மாநில தி. மு.க. நிர்வாகிகள், முன் னாள் மாநில தி.மு.க நிர்வா கிகள், தலைமை பொதுக் குழு உறுப்பினர்கள், இளை ஞரணி நிர்வாகிகள், தி.மு.க. இலக்கிய அணி நிர்வாகிகள், மகளிரணி நிர்வாகிகள், தொ.மு.ச. பேரவை நிர்வா கிகள் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி உரையாற்றுவர்.*

*நிகழ்ச்சியில் கழக உடன் பிறப்புகள் அனைவரும் தவ றாது கலந்து கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு கருநாடக மாநில அமைப்பாளர் ந.இராமசாமி அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.*



ஆஸ்திரேலிய மெல்போர்னில் பெரியார் அம்பேத்கார் சிந்தனை வட்டம் (PATCA), தமிழ்நாடு அரசின் அயலகத் தமிழர் நல வாரியத்துடன் (NRTWB) இணைந்து, 2025 ஆகஸ்ட் 10, ஞாயிற்றுக்கிழமையன்று மெல்போர்னில் ஒரு உற்சாகமளிக்கும் நிகழ்ச்சியை நடத்தியது. இந்நிகழ்ச்சியில் NRTWBஇன் தலைவர், கழக சுற்றுச்சூழல் அணிச் செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி வெளிநாடு வாழ் தமிழர்களுக்கு வாரியத்தின் பல்வேறு ஆதரவு முயற்சிகளை விரிவாக விளக்கி உரையாற்றினார். PATCAஇன் தலைவர் டாக்டர். அண்ணாமலை மகிழ்நன், நிர்வாகக் குழு உறுப்பினர்கள் அரங்க.மூர்த்தி, சுரேஷ், ராதிகா, பொருளாளர் திருமலை நம்பி, உறுப்பினர்கள் வசந்தகுமார், இளையமதி, சரவணன் உள்பட 150க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள், சமூகத் தலைவர்கள், அறிஞர்கள் மற்றும் தமிழ் புலம்பெயர் உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### ஆஸ்திரேலிய பெரியார் – அம்பேத்கர் சிந்தனை வட்டம்!

# அயலகத் தமிழர் நலவாரியத்தின் கூட்டு நிகழ்ச்சி!

## நல வாரியத் தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி பங்கேற்பு!

*சிட்னி, ஆக. 15 -*

*ஆஸ்திரேலிய பெரியார் அம்பேத்கார் சிந்தனை வட்டம் (APATC), மற்றும் அயலகத் தமிழர் நல வாரி யத்தின் கூட்டு நிகழ்ச்சியில் அயலக நல வாரியத் தலை வர், கழக சுற்றுச்சூழல் அணி செயலாளர் கார்த்தி கேய சிவசேனாபதி பங் கேற்பு சிறப்புரையாற்றி னர்.*

*ஆஸ்திரேலிய பெரியார் அம்பேத்கார் சிந்தனை வட்டம் (APATC), மற்றும் அயலகத் தமிழர் நல வாரி யத்தின் கூட்டு நிகழ்ச்சியை 2025 ஆகஸ்ட் 9, சனிக்கிழ மையன்று சிட்னியில் ஒரு முக்கியமான நிகழ்ச்சியாக நடத்தியது. இந்நிகழ்ச்சி யில் அயலகத் தமிழர் நல வாரியத்தின் (NonResident Tamils Welfare Board NRTWB) தலைவர் கார்த்திகேய சிவ சேனாபதி வெளிநாடு வாழ் தமிழர்களுக்கு வாரியத் தின் பங்களிப்பு மற்றும் ஆதரவு குறித்து விரிவாகப் பேசினார்.*

*இந்நிகழ்ச்சி, தமிழ் புலம்பெயர் சமூகத்தினரை ஒருங்கிணைத்து, அவர்க ளின் நலன்களை மேம்ப டுத்துவதற்கு ஒரு முக்கிய தளமாக அமைந்தது. இந்தி யாவின் நம்பர் 1 முதல மைச்சர், தமிழகத்தில் திரா விட மாடல் ஆட்சி நடத்தும் தமிழ்நாடு முதல மைச்சர் அவர்களால் அமைக்கப்பட்ட அயலகத் தமிழர் நல வாரியம், தமிழ் நாட்டிற்கு வெளியே வாழும் தமிழர்களின் சவால்களை எதிர்கொள்ள வும், அவர்களின் நலன்க ளைப் பாதுகாக்கவும் உரு வாக்கப்பட்ட ஒரு முக்கிய அமைப்பாகும்.*

*இவற்றில் சட்ட மற்றும் நிதி உதவிகள், கலாச்சார மற்றும் கல்வி பரிமாற்றங் கள், மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்களின் உரிமை களுக்காக வாதிடுதல் ஆகி யவை அடங்கும். “வெளி நாட்டில் வாழும் ஒவ் வொரு தமிழரும் தங்கள் பூர்வீகத்துடன் இணைந்தி ருக்கவும், அவர்கள் வாழும் நாடுகளில் செழிப்புடன் வாழவும் எங்கள் வாரியம் உறுதிபூண்டுள்ளது,” என்று வாரியத்தின் பல்வேறு முயற்சிகளை கார்த்திகேய சிவசேனாபதி தனது உரை யில் விளக்கி கூறினார்.*

*இந்நிகழ்ச்சியில் ஆஸ்தி ரேலிய பசுமைக் கட்சியின் முன்னாள் செனட்டர் லீ ரியன்னான், நியூ சவுத் வேல்ஸ் மாநில பாராளு மன்ற உறுப்பினர் வாரன் கிர்பி, மற்றும் APATCஇன் தலைவர் அண்ணாமலை மகிழ்நன் ஆகியோர் கலந்து கொண்டனர். ஆஸ்திரேலி யாவின் பன்முக கலாச்சார சமூகத்தில் தமிழர்களின் பங்களிப்பை இருவரும் பாராட்டினர். அண்ணா மலை மகிழ்நன், பெரியார் ஈ.வெ. ராமசாமி மற்றும் டாக்டர் பி.ஆர். அம்பேத் கார் ஆகியோரின் சமூக நீதி மற்றும் பகுத்தறிவு சிந்த னைகளை மேம்படுத்துவ தற்கு APATCஇன் அர்ப்ப ணிப்பை வலியுறுத்தினார்.*

*நிகழ்ச்சியின் முக்கிய அம்சமாக, இரண்டு முக்கி யமான புத்தகங்கள் வெளி யிடப்பட்டன. சிட்னியில் வாழும் அறிஞர் ஞானகுரு தினகரன் செல்லையா அவர்களின் சனாதன லீக்ஸ் என்ற புத்தகம், சமூககலாச் சார பிரச்சினைகளை ஆழ மாக ஆராய்கிறது. மற் றொரு புத்தகமான இந்து தேசியம், தமிழறிஞர் தொ. பரமசிவம் அவர்களால் தமிழில் எழுதப்பட்டு, APATCஇன் பொதுச்செயலா ளர் சுமதி விஜய் அவர்க ளால் ஆங்கிலத்தில் Hindu Nationalism என்று மொழி பெயர்க்கப்பட்டது. இந்த புத்தகங்கள் புரவலர்களால் பெரிதும் பாராட்டப் பட்டன.*

*நிகழ்ச்சியில் பாரம்பரிய தமிழ் இசை மற்றும் நடன நிகழ்ச்சிகளும் இடம்பெற் றன, இது தமிழ் கலாச்சா ரத்தின் பெருமையை வெளிப்படுத்தியது. 200 க்கும் மேற்பட்ட பங்கேற் பாளர்கள், சமூகத் தலை வர்கள், அறிஞர்கள் மற்றும் தமிழ் புலம்பெயர் சமூக உறுப்பினர்கள் இந்நிகழ்ச் சியில் கலந்து கொண்டு, ஆழமான விவாதங்களிலும் பிணைப்பு வாய்ப்புகளி லும் ஈடுபட்டனர்.*

*ஆஸ்திரேலிய பெரியார் அம்பேத்கார் சிந்தனை வட்டம், சமூக சீர்திருத்தம், சமத்துவம் மற்றும் கலாச் சார பாதுகாப்பு குறித்து உரையாடலை மேம்படுத் துவதற்கு தனது உறுதியை மீண்டும் வலியுறுத்தியது. அயலகத் தமிழர் நல வாரி யத்தின் ஆதரவிற்கும், நிகழ்ச்சியை வெற்றிகர மாக்கிய அனைத்து பங் கேற்பாளர்களுக்கும் நன்றி தெரிவித்தது.*



வேலூர் மாவட்டம் அணைக்கட்டுத் தொகுதி மேற்கு ஒன்றியம் கொட்டாவூர் கிராமத்தில் புதிய பேருந்து நிலையத்தை மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஊராட்சிக் குழு பெருந்தலைவர் மு.பாபு, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் என்.பிரகாஷ் ஒன்றிய துணைச் செயலாளர் கணபதி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கம்மராசபுரம் கே.எம்.இராஜகோபால்

### ஆகஸ்ட் 15 (1980)



**தனது 16வது வயதிலேயே திராவிடர் கழகத்தில் இணைந்து, தொடர்ந்து அண்ணாவின் தலைமையை ஏற்று கழகத்தில் தீவிரமாக பணியாற்றி தமிழகமெங்கும் சுற்றி மூடநம்பிக்கை எதிர்ப்பு பிரச்சாரம் செய்தவர்.**

**அண்ணாவின் ‘நீதிதேவன் மயக்கம்’ நாடகத்தில் இராவணன் வேடமேற்று நடித்தவர்.**

**உழவர் குத்தகை உரிமை – இந்தி எதிர்ப்பு – சட்ட எரிப்பு – விலைவாசி உயர்வு எதிர்ப்பு உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் களம் புகுந்து சிறை சென்றவர்.**

**1965ல் இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழும் – 1976ல் மிசா சட்டத்தின் கீழும் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தவர்.**

**உத்திரமேரூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இரண்டு முறையும் – காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராகவும் – கம்மராசபுரம் ஊராட்சி மன்றத் தலைவராக மறையும் வரை தொடர்ந்து பொறுப்பில் இருந்தவர்.**

**காஞ்சிபுரம் வட்டக் கிளைச் செயலாளர் – செங்கல்பட்டு மாவட்ட செயற்குழு உறுப்பினர் – தலைமைச்செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**